# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி : www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.299 /பேரூ/2023
நாள்: 14.11.2023

திரு. வே. கந்தசாமி,
கருகம்பாளையம்
திருப்பூர் மாவட்டம் .... மனுதாரர்

செயல் அலுவலர்,
சாமளாபுரம் பேரூராட்சி,
திருப்பூர் மாவட்டம். .... எதிர்மனுதாரர்

திருப்பூர் மாவட்டம், சோமனூர் –வழி, இச்சிபட்டி அஞ்சல், கருகம்பாளையம், 20F2, கிழக்கு வீதி என்ற முகவரியைச் சேர்ந்த திரு. வே. கந்தசாமி, என்பவரது 20.07.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.07.2023 அன்று பெறப்பட்டு, 299/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருப்பூர் மாவட்டம், சோமனூர் –வழி, இச்சிபட்டி அஞ்சல், கருகம்பாளையம், 20F2, கிழக்கு வீதி என்ற முகவரியைச் சேர்ந்த திரு. வே. கந்தசாமி என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"சாமளாபுரம் பேரூராட்சி, கருகம்பாளையம் 14வது வார்டில் கிழக்கு வீதியில் நகர்ப்புறசாலை மேம்பாட்டுத்திட்டம் 2022–2023ன்கீழ் (மதிப்பீடு ரூ. 31.10 இலட்சம், பணிக்காலம் 180 நாட்கள், ஒப்பந்ததாரர் பெயர் திரு. R. சிவக்குமார், திருப்பூர்) சாலைப்பணி நடைபெற்று வருகிறது. இதில் பழைய பழுதடைந்த சாலையை இடிக்காமல் சாலையின் இருபுறமும் ஒரு அடி மட்டும் இடிக்கப்பட்டு நடுவில் உள்ள பழைய சாலையின் மீது அப்படியே தரமற்ற முறையில் தார் சாலை அமைக்கப்படுகிறது. இதனால் விரைவில் தார் சாலை பழுதடைய வாய்ப்புள்ளது. இது தொடர்பாக பேரூராட்சி நிர்வாகத்தில் தகவல் கேட்டபோது போதுமான நிதி இல்லாத காரணத்தால் சாலை முழுமையாக இடிக்காமல் இருபுறம் ஒரு அடிக்கு மட்டும் இடித்து தார் போடும் திட்டம் செயல்படுத்தப்படுவதாக கூறினார்கள். எனவே

தரமற்ற முறையில் சாலை அமைத்து முறைகேடு நடப்பதாக தெரிகிறது. மேலும் போதுமான நிதி இல்லையென்றால் நிதி ஒதுக்கி தரமான சாலை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 09.10.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் சாமளாபுரம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

சாமளாபுரம் பேரூராட்சி செயல் அலுவலர் தமது 16.10.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:-

மனுதாரர் திரு. வே. கந்தசாமி என்பவர் தனது மனுவில் சாமளாபுரம் பேரூராட்சி வார்டு எண். 14 கருகம்பாளையம் கிழக்கு வீதியில் பழுதடைந்த சாலையை இடிக்காமல் சாலையின் இருபுறமும் ஒரு அடி மட்டும் இடிக்கப்பட்டு நடுவில் உள்ள பழைய சாலையின் மீது அப்படியே தரமற்ற முறையில் தார்சாலை அமைக்கப்பட்டு வருவதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை வழக்கில் அரசு நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடங்களை அகற்ற உத்தரவிடப்பட்டு பல்லடம் வட்டாட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி சாமளாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட மஜரா வேலாயுதம்பாளையம் அருந்ததியர் காலனிக்கு செல்லும் பாதையில் க.ச.எண். 17,18,953 மற்றும் 954–ல் ஆக்கிரமிப்புகள் செய்யப்பட்டு பேரூராட்சி மூலம் அகற்றி நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டதையடுத்து, சம்பந்தப்பட்ட நபர்களுக்கு 7 தினங்களுக்குள் ஆக்கிரமிப்புகளை அகற்ற அறிவிப்பு வழங்கப்பட்டு 17.10.2023 அன்று பல்லடம் வட்டாட்சியர் அவர்களுடன் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட உள்ளதால் செயல் அலுவலரால் மேற்படி விசாரணையில் கலந்து கொள்ள இயலாத நிலை உள்ளது என்பதால் செயல் அலுவலருக்கு அடுத்த நிலையிலுள்ள பேரூராட்சி இளநிலை உதவியாளர் மற்றும் மேற்படி புகார், திட்டப்பணிகள் தொடர்பாக உள்ளதால் சம்பந்தப்பட்ட இளநிலை பொறியாளர் ஆகியோர் கலந்து கொள்வார்கள் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

3) மனுதாரருக்கும், சாமளாபுரம் பேரூராட்சி செயல் அலுவலருக்கும் 16.10.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 09.10.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. இந்நிலையில் மேற்காணும் சாமளாபுரம் பேரூராட்சி செயல் அலுவலரின் கோரிக்கையினை ஏற்று 17.10.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைக்கப்பட்டார்.

4) 17.10.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் திரு. வே. கந்தசாமி என்பவர் ஆஜராகவில்லை. பேரூராட்சி செயல் அலுவலர் ஆக்கிரமிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய காரணத்தினால் 16.10.2023 அன்று ஆஜராக இயலவில்லை என தெரிவித்த காரணத்தினால் 17.10.2023 அன்று விசாரணைக்கு வருமாறு தொலைபேசி மூலம் செயல் அலுவலர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

(5) சாமளாபுரம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு பதிலாக பேரூராட்சியின் இளநிலை பொறியாளர் திரு. N. ராஜவேல் என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் 17.10.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள திருப்பூர் மாவட்டம் சாமளாபுரம் பேரூராட்சி வார்டு எண் 14 கருகம்பாளையம் கிழக்கு வீதியில் உள்ள சாலையின் ஒரு பகுதி பழுதடைந்திருந்தது என்கிற புகார் தொடர்பாக, மேற்கண்ட பழுதடைந்த தார் சாலையின் ஒரு பகுதியை அதாவது, சாலையின் மொத்தமுள்ள 810 மீட்டர் நீளத்தின் ஒரு பகுதியான 220 மீட்டர் நீளமுள்ள பகுதியை அகற்றிவிட்டு புதிதாக தார் சாலை அமைக்கப்பட்டன. மேலும், மீதமுள்ள 590 மீட்டர் நீளமுள்ள பழுதடைந்த தார்சாலையும் புதுப்பிக்கப்பட்டன. கடந்த 2023 செப்டம்பர் மாதம் முடிக்கப்பட்ட மேற்கண்ட பணிகளுக்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 31.10 இலட்சமாகும்.

மேற்கண்ட சாலைக்கான தரச்சான்று மற்றும் மூன்றாம் நபர் (Third Party Road Inspection Report) சான்று சேலம் அரசு கல்லூரியில் பெறப்பட்டுள்ளது என்பதையும் தற்போது மேற்கண்ட சாலை நல்ல நிலையில் மக்களின் பயன்பாட்டில் உள்ளது என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்து அவற்றின் புகைப்படங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

6) மனுதாரரின் புகார் மனு மற்றும் சாமளாபுரம் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை, பேரூராட்சி இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

திருப்பூர் மாவட்டம், கருகம்பாளையம் என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. வே. கந்தசாமி என்பவர் தனது 20.07.2023 நாளிட்ட மனுவில் சாமளாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட 14வது வார்டில் அமைந்துள்ள கிழக்கு வீதியில் ரூ.31.10 இலட்சம் மதிப்பீட்டில் முறைகேடாக தரமற்ற தார்சாலை சாமளாபுரம் பேரூராட்சியால் அமைக்கப்பட்டுள்ளது என புகாராக தெரிவித்துள்ளார்.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் சாமளாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14, கருகம்பாளையம் கிழக்கு வீதியில் 2022–23ஆம் ஆண்டு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 31.10 இலட்சம் மதிப்பீட்டில் சாலையின் மொத்தமுள்ள 810 மீட்டர் நீளத்தின் ஒரு பகுதியான 220 மீட்டர் நீளமுள்ள பழுதடைந்த சாலையினை அகற்றி புதிதாக தார்சாலை அமைக்கப்பட்டுள்ளதும் மற்றும் மீதமுள்ள 590 மீட்டர் நீளமுள்ள பழுதடைந்த தார்சாலையையும் புதுப்பிக்கப்பட்டுள்ளதாக பேரூராட்சி இளநிலைப்பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக தெரியவருகிறது.

மேலும் மேற்காணும் தார்சாலை பணியினை மேற்கொண்டது குறித்து தர்மபுரி மாவட்ட அரசு பொறியியல் கல்லூரியால் மூன்றாம் நபர் ஆய்வறிக்கையான தரச்சான்று வழங்கப்பட்டுள்ளதை உரிய ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

மனுதாரர் திரு. வே. கந்தசாமி என்பவர் சமர்ப்பித்த புகார் மனு குறித்து நிரூபிக்கும் வகையில் விசாரணைக்கு ஆஜராகுமாறு போதிய சந்தர்ப்பம் அளித்தும், மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகவில்லை. மேலும் மனுதாரர் தனது புகாரினை நிரூபிக்கும் வகையில் எவ்வித ஆதார ஆவணங்களையும் சமர்ப்பிக்காத நிலையிலும்

மற்றும் சாமளாபுரம் பேரூராட்சி இளநிலைப் பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் அவர் சமர்ப்பித்த ஆவணங்கள் ஆகியவற்றை ஏற்றும், இப்புகார் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு, நவம்பர் 14 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. வே. கந்தசாமி,
20F2, கிழக்கு வீதி, இச்சிபட்டி அஞ்சல்
கருகம்பாளையம், திருப்பூர் மாவட்டம்

2) செயல் அலுவலர்,
சாமளாபுரம்பேரூராட்சி,
திருப்பூர் மாவட்டம்

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர்
(Nodal Officer)(பெயரிடப்பட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், சென்னை –28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்
18.11.2023